## அபிவிருத்தியடையும் நாடுகளின்

# வறுமை நீக்க

## உலக வங்கியின் புதிய திட்டம்

வாஷிங்டன், செப் 30

ஆசியாவின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வறுமையை நீக்க உலக வங்கி புதிய திட்டமொன்றை வகுக்கவிருக்கிறது.

இதனை உலக வங்கியின் புதிய தலைவர் திரு. மக்நமாரா இன்று உலக வங்கிக் கவர்னர்கள் சபை கூட்டத்தில் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி அடுத்த 5 வருடங்களில் வறுமையை நீக்க இந்நாடுகளுக்கு 475 கோடி ஸ்டெர்லிங் பவுண்கள் செலவிடப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏந்த நாடுகளில் குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கும் உதவ போதிய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் திரு. மக்நமாரா தெரிவித்தார்.

### இலங்கை நிதிமந்திரி

இன்று நடைபெற்ற வங்கி கவர்னர்கள் சபைக்கு இலங்கை நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்க தலைமை தாங்கினார்.


Registered as a Newspaper in Ceylon

* விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

தபால்பெட்டி எண்: 49

இதழ் 233

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

[illegible] கீலக புரட்டாதி 16 றஜப் 8 செவ்வாய்க்கிழமை (1-10-68)


# குழந்தைகள் 'மர்ம' நோய் கண்டுபிடிக்க புதுபரிசோதனை

## இறந்த உடலை அறுவை செய்ய யாழ். வைத்திய நிபுணர் முயற்சி

நல்லூர், திங்கள்

வடபகுதியில் குழந்தைகளை பலி எடுக்கும் வயிற்றோட்டம் என்று கூறப்படும் மர்ம நோயைத் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளில் யாழ். ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு குறைந்துகொண்டு வந்த இந்த 'மர்ம' நோய்க் கொடுமை மீண்டும் இப்போது தன் தாக்குதலைத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து வைத்திய நிபுணர்கள் இந்த நோய் குறிப்பாக என்னவாக இருக்குமென்று கண்டறிவதற்காக குழந்தையொன்றின் உடலை அறுவை செய்து பரிசோதனைக்குள்ளாக்கவிருக்கிறார்கள்.

இந்த 'மர்ம' நோயினால் இறந்த குழந்தையொன்றின் உடலை அறுவைக்குள்ளாக்கி அதன் உடலை எடுத்து, அதன் மூலம் நோயைக் கண்டுபிடிக்கலாமென யாழ் ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்கள் நம்புகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை வைத்திய நிபுணர்கள் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர். ——

### அவுஸ்திரேலியாவின் உதவி

பம்பலப்பிட்டி, செவ்வாய்

அவுஸ்திரேலியா இலங்கைக்கு ரூபா 35 லட்சத்துக்கும் கூடுதலான பெறுமதியுள்ள மாவை உதவியுள்ளது.

இந்த அன்பளிப்பை நேற்ற இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவர் திரு. ஜி. என். ஆப்தன் உணவமைச்சர் திரு. எம். டி. பண்டாவிடம் கையளித்தார்.

### யாழ்ப்பாணத்தில் பொலிசார் அணிவகுப்பு

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி பொலிசாரின் அணிவகுப்பு மரியாதைகளும், சாகச விளையாட்டுகளும் இன்று மாலை யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

இவ் வைபவத்துக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜலில் பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மாலை 4 மணிக்கு அணிவகுப்பு மரியாதையும் 4-30 மணிக்கு வீதி விபத்துக்களைத் தடுப்பது பற்றிய விளக்கக் காட்சிகளும், பொலிஸ் வாகன, மோட்டார் சைக்கிள் சாகச விளையாட்டுக்களும், 5 மணி முதல் பொலிஸ் 'பாண்ட்' வாத்திய இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (கா. நி)

### 'ஐ. அ. குடியரசுக்கு 500 ரஷ்ய டாங்கிகள்'

நியூயோர்க், செப். 30

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு புதிய ராணுவ உதவி கிடைத்துள்ளதாகவும் இதற்கான உடன்படிக்கை ஒன்று சோவியத் யூனியனுக்கும் ஐ. அ. குடியர

[8-ம் பக்கம் பார்க்க]

### ஒருபதவி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபரான திரு. கே. முருகேசம்பிள்ளை விரைவில் மீன்பிடி அமைச்சின் உதவி டைரக்டராகவும் நியமிக்கப்படவிருக்கிறார். சென்றவார இறுதியில் இங்கு வந்த மீன்பிடி அமைச்சின் டைரக்டரான திரு. ஐ. ஓ. கே. வி. ஜி. பெர்னாண்டோ இதனைச் சிபார்சு செய்து மீன்பிடி அமைச்சர் திரு பிலிப்குணவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளார் (கா. நி.)

## பதவி ஓய்வுப் பத்திரங்களை திரு. ஹுடுக்கின்ஸ் சமர்ப்பித்தார்

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட திரு. ஹுடுக்கின்ஸ், அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான தமது பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளார்.

திரு. ஹுடுக்கின்ஸ் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக சில தினங்கள் கூட பதவி வகிக்க மாட்டாரென்றும் அவர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கிறாரென்றும் "ஈழநாடு" பத்திரிகை மட்டுமே செய்தி வெளியிட்டிருந்தது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக தமிழ் தெரிந்த ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் தமிழ் தெரியாத ஒருவர் அரசாங்க அதிபராக இருப்பதால் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்கள் தமிழில் நடத்த முடியாதிருப்பதாகவும் பொது மக்களும் வீண் கஷ்டங்களுக்குள்ளாக நேரிடுகிறதென்றும் இனிமேலாவது பிரதிநிதியும் மற்றும் பலரும் பல தடவைகளில் எடுத்துக் கூறி அரசாங்கத்தைக் கேட்டிருந்தனர்.

ஆனால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக ஒரு தமிழரை நியமிப்பதில்லையென்று அரசாங்கம் சமீபத்தில் முடிவு செய்திருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

திரு. ஹுடுக்கின்ஸ் ஓய்வு பெறுவதாலும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வரும் திரு. வேர்னன் அபயசேகரா தபால் மா அதிகாரியாகப் பதவிபெற்றதாலும் யாழ். மாவட்டத்துக்கு புதிய அரசாங்க அதிபராக ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகளில் உள்நாட்டு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

திட்டம், பொருளாதார அமைச்சின் வெளிநாட்டு உதவிப் பிரிவு டைரக்டராக பதவி வகித்துவரும் திரு. டேவிட் ரோஜ், நுவரெலியா கச்சேரியைச் சேர்ந்த திரு. பீட்டர் ஆகிய இருவரில் ஒருவரை அரசாங்க அதிபராக நியமிக்க ஆலோசனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# எதிரிக்கு தூக்கு

## புனிதவதி கொலை வழக்கு தீர்ப்பு

யாழ்ப்பாணம் செவ்.

புனிதவதி கொலைவழக்கில் எதிரியான கிருஷ்ணபிள்ளை அல்லது மாசுவன் என்பவருக்கு இன்று நண்பகல் 12-45-க்கு மரணதண்டனை விதித்து நீதியரசர் திரு. ஓ எல். டி. கிரெட்சர் தீர்ப்பளித்தார்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றம் இன்றுகாலை கூடியதும் நீதியரசர் தமது தொகுப்புரையை ஆரம்பித்தார். இது மூன்று மணிநேரம் நீடித்தது. இதன்பின் ஜூரி சபையினர் 38 நிமிடங்கள் மந்திராலோசனை செய்தபின் எதிரி கொலைக்குற்றவாளியென ஏகமனதாகத் தெரிவித்தனர்.

"நான் சுற்றவாளி. இதற்கு மேல் எதுவும் சொல்ல விரும்பவில்லை" என்று எதிரி கூறினார்.

தொல்புரத்தைச் சேர்ந்த மாதம் 4-ம் திகதி கொலை செய்ததாக கிருஷ்ணபிள்ளை புனிதவதி என்ற பெண்ணை 1967-ம் ஆண்டு அக்டோபர்

[8-ம் பக்கம் பார்க்க]


## நுண்கலைக் கழகம்

மேற்படி கழகத்தின் சார்பில் நடைபெற்று வந்த சங்கீத வகுப்புக்களுடன் 1-10-68 விஜயதசமி அன்று தொடக்கம் நடன வகுப்புகள் நடன ஆசிரியை ஞானமணி செல்லையா அவர்களால் போயா தினங்களிலும் அதற்கு முந்திய தினங்களிலும் நடாத்தப்படும்.

சி. சா. வேலுப்பிள்ளை
நிர்வாகி
நுண்கலைக் கழகம்

யாழ். மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்விச் சபையினால் எவ்விதபயனுமில்லை

## கலைத்துவிட வேண்டும்

### என்கிறார் டாக்டர் என். எம்.

கொழும்பு, திங்கள்

நான்கு பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக விரிவான விசாரணை நடத்துவதற்கு கமிஷன் ஒன்று இப்போது அவசியமாகியுள்ளதாக ஆட்சி மன்றத்தில் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தெரிவித்துள்ளார்.

பூமிசாஸ்திரம் பயிலும் பட்டப்படிப்பு மாணவர்கள் கொழும்பிலிருந்து பேராதனைக்கு செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் இம் மாணவர்கள் சிரமத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாகவும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் எழுப்பிய கேள்விபொன்றுக்கு பதிலளித்த கல்வி அமைச்சர் பேராதனையில் இவர்கள் இல்லாததாலேயே பூமிசாஸ்திரம் பயிலும் மாணவர்கள் பேராதனை செல்லவேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

தேசிய உயர்கல்விச்சபையால் எதுவித பிரயோசனமுமில்லை என்றும் இச்சபை கலைக்கப்பட வேண்டுமெனவும் டாக்டர் என். எம். பெரேரா அபிப்பிராயம் வெளியிட்டார்.

---

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
விசேஷ தினங்களில் 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நாகேஷ்
நடித்த
படகோட்டி

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Clint Eastwood,
Marianne Koch
in
Fistful of Dollars

2வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
என். டி. ராமாராவ்
ஜெயலலிதா, ராஜஸ்ரீ
நடித்த
அபூர்வப்பிறவிகள்

97-வது தினம்!
ராணி
யாழ்ப்பாணம்
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

## குருப்பட்டம்

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ்ப்பாணம் ஆசனக் கோவிலைச் சேர்ந்த வண. பிரான்சிஸ் டானியல் சகோதரர் வரும் 5ந்திகதி ஆசனக்கோவிலில் குருப்பட்டம் பெறுவார். 7 ந்திகதி புதிய குரவர் தமது முதற் பூசையை நிறைவேற்றுவார்.

---

## வெற்றியீட்டிய நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை தமிழாசிரியர்களுக்கிடையிலான நாடகப்போட்டியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல் இடத்தையும் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை இரண்டாம் இடத்தையும் பெற்றன. [ந. நி.]

மகத்தான 3வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
கலைப்பேரரசர்
எம். ஜி. ராமச்சந்திரன்
கன்னடத்து பைங்கிளி
சரோஜாதேவி
கே. ஆர். விஜயா - மனோகர் - நாகேஷ்



நடித்த
நான் ஆணையிட்டால்

கிங்ஸ்லி
(கொழும்பு)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
நான்

# பேராதனைபல்கலைகழகத்தில் இம்முறை 'ருகிங்' இல்லை

## சமய முறைப்படி புதிய மாணவர் வரவேற்கப்படுவர்

### நிகழ்ச்சிகள் விபரம்

யாழ்ப்பாணம், செவ்.

இம்முறை பேராதனைப்பல்கலைக்கழகத்திற்கு புதிதாக பிரவேசிக்கும் மாணவர்கள் 'ருகிங்' செய்யப்படமாட்டார்கள். இதற்குப்பதிலாக பல சமய நிகழ்ச்சிகளுடன் மாணவர்களை அறிமுகம் செய்வதற்கான ஒழுங்குகளை பல்கலைக்கழக இந்துமாணவர்சங்கத்தினர் செய்துவருகின்றனர்.

புதியமாணவர்கள் இம்மாதம் 6-ந்திகதி பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படவிருக்கின்றனர். 'ருகிங்' கிற்குப் பதிலாக அன்று நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் விபரம் பின்வருமாறு:—

காலை 8.30- பல்கலைக்கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முருகன் கோவிலில் அனைவரும் ஒன்று கூடல். 8.45மணி- விநாயகப்பெருமானுக்கு அர்ச்சனை. 9.15 மணி- துதிப்பாடல்கள். 10 மணி-பூஜை. 10.45 மணி- விசேஷ சொற் பொழிவுகளும், வேதம் திருமுறைபாராயணம் ஆகியவற்றின் சில பகுதிகள் ஓதலும். மாலை 1.30 மணி- ஒலிப்பதிவு செய்யப்பட்ட துதிப்பாடல்கள். 3.00மணி- புதியமாணவர்களும் பழைய மாணவர்களும் கலந்துரையாடல். 4.00மணி- தேநீர் விருந்து. 4.30மணி- கோவிலில் சிவ தொண்டு. 5.30 மணி- விசேஷ பூஜை. 6.15 மணி-மாணவர்கள் விடுதிக்குச் செல்லல்.

விடுதிப்பகுதிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள் இம்மாதம் 5-ந்திகதி மாலை 5.30மணிக்கு விசேஷ பூஜையுடன் வரவேற்கப்படுவர்.

## வல்வெட்டியில் காங்கிரஸ்கிளை

வல்வெட்டித்துறை, திங்.

வல்வெட்டியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணிக்கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வல்வெட்டித்துறை நகரசபை உபதலைவர் திரு. நா. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் உடுப்பிட்டி எம். பியும், உபகாரநாயகருமான திரு. எம். சிவசிதம்பரமும் கலந்து கொண்டார்.

கிளையின் நிர்வாகிகள் விபரம் வருமாறு-

தலைவர்- திரு. வ. அப்புத்துரை, உபதலைவர்- திரு. க. துரைராசா, காரியதரிசி- திரு. கி. இராசரத்தினம், உபகாரியதரிசி: திரு. பொ. கணேசலிங்கம், தனாதிகாரி- திரு. தங்கவேலாயுதம். நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## ஆராய்கின்றனர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

தனியார் பாடசாலை பற்றிய முடிவை இருகுழுக்கள் ஆராய்ந்து வருகின்றன. இலங்கைக் கத்தோலிக்க சபைத் தலைவர் தலைமையில் ஒரு குழுவும், பாடசாலைகளை நடாத்தி வரும் சந்நியாச சபையினரைக் கொண்ட மற்றொரு குழுவும் ஆலோசனை செய்து வருகின்றது. வருட முடிவில் இது சம்பந்தமான முடிவு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தராதரப் பத்திரம் பெற்றனர்

இமையாணன், திங்கள்

உடுப்பிட்டி கிராம இணக்கசபையின் ஆரம்பக் கூட்டம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெற்றபோது பின்வருவோருக்கு நீதியமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான ஜனாப் எம். எச். எம். நெயினா மரக்காயரால் கைச்சாத்திடப்பட்ட தராதரப் பத்திரங்களை இணக்கசபையின் நிர்வாகச் செயலாளரான திரு வி. ஜி. சிறிவர்த்தன வழங்கினர்.

எஸ். சரவணமுத்து செல்லத்துரை [தலைவர்] சமுவல் பொன்னையா வீரவாகு, சரவணமுத்து கிருஷ்ண பிள்ளை, கணபதிப்பிள்ளை ஆறுமுகம், தவலுப்பிள்ளை பொன்னம்பலம், மயில்வாகனம் ராசேந்திரம், கதிரவேலு தணிகாசலம், இராமலிங்கம் சோமசுந்தரம், சிங்காரம் வல்லிபுரம், நல்லதம்பி கந்தையா, கதிர்காமு வேலுப்பிள்ளை, முத்து சிவரத்தினம், சின்னப்பிள்ளை சரவணப்பெருமாள், வடிவேது வல்லிபுரம். கதிர்காமு சின்னத்தம்பி, வைரமுத்து இராசரத்தினம், கிருஷ்ணர் மயில்வாகனம், பொன்னுத்துரைசாமி பாலசுந்தரம், பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை, கந்தவனம் வைரமுத்து, இன்னதம்பி மயில்வாகனம், ஆறுமுகம் நாகலிங்கம், சின்னத்தம்பி தங்கராசா, வேலுப்பிள்ளை நடராசா, [illegible] இராசலிங்கம் [illegible] [illegible] கணபதிப்பிள்ளை முருகேசு,

# ரூ. 1 லட்சம் நஷ்டம்

கொழும்பு, திங்கள்

கொழும்பில் தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் பெருமழையைத் தொடர்ந்து, கொழும்புத்துறைமுகத்தில் பொருட்கள் எவையுமே இறக்கப்படாத நிலையில் வெளிநாட்டுக்கப்பல்கள் காத்துக்கொண்டு நிற்கின்றன.

வேலைநிறுத்தத்தால் அரசாங்கத்திற்கு 1 இலட்சம் ரூபா வெளிநாட்டுச் செலாவணி நஷ்டமேற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 60,000 தொன் உணவுப் பொருட்கள் இறக்கப்படாமல் கப்பல்களில் தேங்கிக் கிடப்பதாகவும் தெரியவருகிறது.

---

ஆட்சிமன்றத்தில்

## தமிழரசு எம். பி.க்களின் ஆசனப்பிரச்னை

கொழும்பு, திங்கள்

ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சிப் பக்கத்தின் ஓரத்திலுள்ள கைப்பிடிகளாகப் போடப் பட்டிருக்கும் தடைகளை நீக்கி அவ்விடத்தில் தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் அமர்வதற்கு ஆசனங்கள் போடப்படலாம். அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் சிலர் சபாநாயகரிடம் இந்த யோசனையைத் தெரிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியினர் தொடர்ந்து சபாநாயகரிடம் ஆட்சிமன்றத்தில் தாம் இருப்பதற்கு ஆசனவசதியை உடனடியாகச் செய்து தரும்படி மீண்டும் வற்புறுத்தியுள்ளனர்.

## பெண் விரிவுரையாளர்

அல்லைப்பிட்டி, திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை ஆயுள்வேதக் கல்லூரிக்கு புதிய பெண் விரிவுரையாளராக செல்விடாக்டர் இரா வேலாயுதம் இம்மாதம்முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு வைத்தியக் கல்லூரி பட்டதாரியாவார்.

---

வேலுப்பிள்ளை அருணாசலம் [illegible] தங்கராசா, சின்னத்தம்பி ஐயாத்துரை ஐயா தம்பிப்பிள்ளை.

## நல்லையாவுக்கு பாராட்டு

அளவெட்டி, திங்கள்

"சைவப்பிரசாரகர் திரு. வி. நல்லையா, இக்கோவிலில் கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து கந்தப்புராண விரிவுரையாற்றி இப்பகுதி மக்களிடையே ஆத்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்."

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த கந்தபுராண விரிவுரையின் பூர்த்தி விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மாவை கந்தன் ஆலய ஆதினகர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள் கூறினார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் பூர்த்தி விழாவில் இப்பகுதி மக்கள் சார்பில் திரு நல்லையாவுக்கு திரு. சின்னத்துரையால் பணமுடிப்பு ஒன்று வழங்கப்பட்டது.

---

## குடத்தனை கிராமசபை கேள்வி விளம்பரம்

குடத்தனைக் கிராமசபைத் தலைவரால் குடத்தனை கரையூர் மீன்பிடி இலாகா ரோட்டு வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 16-10-68-ம் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா 25/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டி பதவியோரிடம் 14-10-68-ம் திகதி பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது.

வேறுவிபரங்கள் கந்தோர் நேரங்களில் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

வ. துரையப்பா,
தலைவர்,
குடத்தனைக்கிராமசபை.

கி. ச. கந்தோர்,
குடத்தனை, 1-10-68.

1001

# சீனுவை சுற்றிவளைக்க ரஷ்யா முயல்வதாகச் சீனப்பிரதமர் குற்றச்சாட்டு

## 'அல்பேனியாவையும் பயமுறுத்துகிறது'

பீகிங், செப். 30

**சீனுவின் எல்லைகளில் ரஷ்யா தனது துருப்புகளைக் குவிப்பதாகச் சீனப் பிரதமர் திரு. சூ என் லாய் குற்றஞ்சாட்டியுள்ளார்**

**சீனுவுக்கு விஜயம் செய்துள்ள அல்பேனிய தூதுகோஷ்டிக்குப் பீகிங்கில் அளிக்கப்பட்ட வரவேற்புபசார மொன்றில் பேசுகை யிலேயே, சீனப்பிரதமர் இவ்வாறு சோவியத் யூனியன் மீது குற்றஞ்சாட்டினுர்:**

சோவியத் ரஷ்யா, சீனுவைச்சுற்றி வளைக்கப் பார்ப்பதாகவும் திரு. சூ என்லாய் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

இந்த நோக்கத்துடன் தான், ரஷ்யா அண்மையில் பலமுறை, சீன வானப்பிராந்தியத்தில் தனது விமானங்களை அத்துமீறிப்பறக்க விட்டு வந்துள்ள தெனவும் சீனப்பிரதமர் குறிப்பிட்டார்.

**அல்பேனியா மீது பயமுறுத்தல்**

அவர்மேலும் பேசுகையில் அல்பேனியாவைப் பயமுறுத்தும் நோக்கத்துடன் ரஷ்யா, பல்கேரியாவுக்குள் துருப்புகளை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனுல், சீனப்பிரதமரின் இக் குற்றச்சாட்டை பல்கேரியா மறுத்துள்ளது.

**வெளிநடப்பு**

அல்பேனியத்தூது கோஷ்டிக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தின் போது, சீனப்பிரதமர் இவ்விதம் ரஷ்யா மீது குற்றங்களைச் சமத்திய போது, கிழக்கு ஜெர்மனி, போலாந்து, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள், கூட்டத்தை விட்டு வெளியேறினர். சோவியத் பிரதிநிதிக்கு அழைப்பு அனுப்பப் படவில்லை. ருமேனியாவின் பிரதிநிதி, நிகழ்ச்சிக்குச் சமுகமளிக்கவில்லை.



### வாஷிங்டனில் தேசாய்

#### ரஸ்க்குடன் சந்திப்பு

வாஷிங்டன், செப். 30

இந்திய உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்கைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

பின்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், பல பிரச்னைகளைப்பற்றி பொதுவாகத் இருவரும் பேசியதாகத் திரு. தேசாய் தெரிவித்தார்.

இன்றுவாஷிங்டனில்ஆரம்பமாகும் உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் மாநாட்டில் பங்குபற்றத் திரு. தேசாய், நியூயோர்க்கிலிருந்து வாஷிங்டன் வந்துசேர்ந்தார்.

நியூயோர்க்கில், ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட், திரு. தேசாயைக் கௌரவிக்கு முகமாக இரவுப்போசன விருந்து ஒன்று அளித்தார்.

# புதிய அரசியற்சாஸனத்தை கிரீஸ் மக்கள் ஏற்றனர்

அதென்ஸ், செப். 30

கிரீஸில், அதன் புதிய அரசியற் சாஸனத்தை மக்கள் பெருமளவில் ஆதரித்து வாக்களித்துள்ளனர். நேற்று, கிரீஸில் நடைபெற்ற பொது ஜன வாக்கெடுப்பின் முடிவுகள் இதை வெளியிட்டுள்ளன.

கிரீஸ் நாட்டின் இப்புதிய அரசியற் சாஸனம், இப்போது வெளிநாட்டிலிருக்கும் கிரேக்க மன்னரான கொன்ஸ்டன்டைனின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதுடன், ஒரு பலமான நிர்வாக சபை நிறுவப்படுவதற்கும் வழி வகுக்கிறது.

தற்போதைய கிரேக்க அரசாங்கத்தின் பிரதமரான திரு. ஜோர்ஜ் பப்படாபவ்லஸ், முடிவுகளுக்குப் பின்னர் வெளியிட்ட அறிக்கை யொன்றில், புதிய அரசியற் சாஸனத்துக்கு மக்கள் அளித்துள்ள ஆதரவு, நாட்டின் தற்போதைய கொள்கைகளை அவர்கள் அங்கீகரிக்கிருர்கள் என்பதையே காட்டுவதாகக் கூறியுள்ளார்.

# பாகிஸ்தான் விமானிகள் வேலை நிறுத்தம்

ராவல்பிண்டி, செப். 30

பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை, தனது உள்நாட்டு வெளிநாட்டு சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

இச்சேவையைச் சேர்ந்த விமானிகள் வேலைநிறுத்தம் செய்துள்ளதன் விளைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேவைக்குதவாத விமானங்களைச் செலுத்துவதற் கெனத் தமக்குத் தருவதால் அவ்விமானங்களில் செல்லும் பிரயாணிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் ஆபத்து ஏற்படுவதாக விமானிகள் குறை கூறியுள்ளனர்.

விமானிகள் வேலைநிறுத்தத்தைப் பாகிஸ்தான் அரசாங்கம் சட்டவிரோதமானதெனக் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் விமான சேவையை ஓர் அத்தியாவசிய சேவையாகவும் அது பிரகடனப்படுத்தியுள்ளது.

# இஸ்ரேலிடமுள்ள அரபுப்பகுதிகளில் வாழும் அரபு மக்கள் நிலை

## ஐ. நா. கமிஷனுக்கு இஸ்ரேல் மறுப்பு

டெல் அவிவ், செப். 30

இஸ்ரேல் கைவசமுள்ள அரபுப் பிராந்தியங்களில் வாழும் அரபு மக்களின் வாழ்க்கை நிலைபற்றி ஆராய அவ்விடங்களுக்கு ஐ. நா. கமிஷன் ஒன்று அனுப்பப்படுவதை அனுமதிக்க முடியாது என்று இஸ்ரேல் மீண்டும் அறிவித்துள்ளது.

அப்படிஒருகமிஷனை ஐ. நா. இஸ்ரேலுக்கு அனுப்புவதானுல், அரபு நாடுகளில் வாழும் யூதர்களின் வாழ்க்கை நிலையை ஆராய அந்த நாடுகளுக்கும் ஐ. நா. ஒரு கமிஷனை அனுப்ப வேண்டுமென்ற தனது கோரிக்கையை இஸ்ரேல் திரும்பவும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்று கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை, கமிஷன் ஒன்றை இஸ்ரேலுக்குஅனுப்புவதென முடிவு செய்திருந்தது.

# உருகுவேயிலிருந்து இந்தியப் பிரதமர் ஆர்ஜெண்டீனு வந்து சேர்ந்தார்

## நட்பின் தூதுவர் என விமானநிலையத்தில் பாராட்டு

பியூனஸ் ஏரெஸ், செப். 30

**இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று உருகுவேயிலிருந்து ஆர்ஜெண்டீனுத் தலைநகரான பியூனஸ்ஏரெஸுக்குப் போய்ச் சேர்ந்தார்.**

அவர், ஆர்ஜெண்டீனுவில், அந்நாட்டுப் பிரதமருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார். ஆர்ஜெண்டீனு ஜனுதிபதியையும் அவர் சந்திப்பார்.

திருமதி இந்திராகாந்தி, பியூனஸ் ஏரெஸ்விமானநிலையத்தை வந்தடைந்தபோது அவருக்கு உற்சாகமும் கவர்ச்சியும் நிறைந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

உருகுவேயிலிருந்து, அந்நாட்டு ஜனுதிபதி ஒழுங்கு செய்திருந்தவிசேஷ விமான மொன்றின் மூலம் இந்தியப் பிரதமர் பியூனஸ் ஏரெஸ் விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

**விமானநிலைய வரவேற்பு**

பியூனஸ் ஏரெஸ் விமான நிலையத்தை, இந்தியா, ஆர்ஜெண்டீனு ஆகிய இருநாடுகளினதும் தேசியக் கொடிகள் அலங்கரித்தன. பிரதமரை விமான நிலையத்தில் வைத்து ஆர்ஜெண்டீனு வெளியுறவு மந்திரி வரவேற்றுர். மற்றும் பியூனஸ்ஏரெஸ் நகரின்மேயர், இந்தியத்தூதுவர் உட்பட பல முக்கியபிரமுகர்களும் பிரதமரை வரவேற்க வந்திருந்தனர்.

விமானத்திலிருந்து இறங்கியதும், தமக்களிக்கப்பட்ட கௌரவ அணிவகுப்பை, இரு நாடுகளினதும் தேசிய கீதங்கள் பின்னணியில்இசைக்க, இந்தியப் பிரதமர் பார்வையிட்டார்.

**'நட்பின் தூதுவர்'**

இந்தியப் பிரதமரை வரவேற்றுப் பேசிய ஆர்ஜெண்டீனு வெளியுறவு மந்திரி, இந்தியாவிலிருந்து நட்பின் தூதுவராக திருமதி இந்திராகாந்தி அங்கு வந்திருப்பதாகக் குறிப்பிட்டார். உலகில், சமாதானத்துக்கும் நட்புறவுக்கும் பணியாற்றும் நாடுகளில், இந்தியா முன்னணியில் நிற்பதாகவும் அவர் தனது உரையில் பாராட்டினுர்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர், வெளியுறவு மந்திரி வெளியிட்ட கருத்துகளுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார்.

**மக்கள் சந்திப்பே நோக்கம்**

தாம் தமது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தன் நோக்கம், பிறநாட்டு மக்களைச் சந்திக்கவும், அவர்களுடன் நட்புறவை வளர்த்து, அவர்களை நெருக்கமாக உணர்ந்து கொள்ளவுமேயாகும் என்று திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

விமான நிலையத்திலிருந்து இந்தியப் பிரதமர் தாம் தங்கும் ஹோட்டலுக்குச்செல்லும் வழியெல்லாம், மக்கள் கூடிநின்று ஆரவாரம்செய்து அவரை வரவேற்றனர். எல்லா இடங்களிலும் இரு நாட்டுத் தேசிய கொடிகளும் பறந்து கொண்டிருந்தன.

**தாகூரின் நண்பர்**

நேற்று பியூனஸ் ஏரெஸில் திருமதி இந்திராவை கௌரவிக்குமுகமாக ஆர்ஜெண்டீனுவின் பிரபல எழுத்தாளரான திரு. மருவோகாம்போ ஒரு பகல் விருந்து அளித்தார். இவர், காலஞ்சென்ற இந்தியக்கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் நண்பராவார்.

இந்தியப் பிரதமரின் விஜயத்தைமொட்டி, ஆர்ஜெண்டீனுப் பத்திரிகைகள்விசேஷ கட்டுரைகளும், தலையங்கங்களும் தீட்டியுள்ளன. இப்பத்திரிகைகள் அதிக பக்கங்களை வெளியிட்டன.

திருமதி இந்திராகாந்தி ஆர்ஜெண்டீனுவில் மூன்று நாட்கள் தங்கியிருப்பார்.

### தடுப்பு ஊசி

சுழிபுரம், திகதி

சுழிபுரம் கிராமசபைப்பகுதியில் இரண்டாம் முறையாக இலவசமாக தடுப்பு ஊசி போடப்பட்டு வருகின்றன.

# ஐ.நா. ஆலோசனைப்பட்டியலில் செக். பிரச்னையைச் சேர்ப்பது

## இந்தியா எதிர்க்கும்

புதுடில்லி, செப். 30

ஐ. நா. பொதுச்சபையின் நடப்புத் தொடரின் ஆலோசனைப் பட்டியலில் செக்கோஸ்லோவாக்கியப்பிரச்னையைச் சேர்ப்பதை இந்தியா எதிர்க்கும் என்று இந்திய ராஜாங்க வெளியுறவு மந்திரி திரு. பகத் இங்கு தெரிவித்தார்.

சீனுவை ஐ. நா. வில் சேர்ப்பது சம்பந்தமாக இந்தியா என்ன கொள்கைநிலையைப் பின்பற்றும் என அவரிடம் கேட்கப்பட்டபோது, அந்த விஷயம் ஏற்கனவே ஐ. நா. ஆலோசனைப்பட்டியலில் இருப்பதாகக் கூறிய திரு. பகத் இந்தியா சீனுவின் அனுமதியை ஆதரிக்குமென்று குறிப்பிட்டார்.

திபேத்தில் மனித உரிமை பிரச்னை பற்றித் திரு. பகத் குறிப்பிடுகையில் அப்பிரச்னையையாராவது சபையில் கிளப்பினுல் அதற்கு இந்தியாவின் ஆதரவு இருக்குமென்றுர். ஆனுல், அது சம்பந்தமான முதல் நடவடிக்கையை இந்தியா எடுக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை ஐ. நா. பொதுச்சபைக்கு இந்தியாவின் தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கும் திரு. பகத், புதன்கிழமையன்று நியூயோர்க் செல்லுகிருர்.

### புதிய ரக புகையிலை

ஜெனிவா, செப். 30

புகையிலைச் செடியைப் பயங்கரமாக அழிக்கக்கூடிய 'புளூ மோல்ட்' எனும் வியாதியால் தாக்கப்படாத புதிய ரக புகையிலையை ஜோர்டேனிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இப்புதிய புகையிலை சோவியத் யூனியனின் பல பாகங்களிலும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் இது சோதனையில் தேறியது, இந்த ரக புகையிலையின் உற்பத்தி மிகக் கூடுதலானதாகும். (ஒரு ஹெக்டேருக்கு இதன் விளைச்சல் 40 ஸெண்டனர்களாகும்) அகண்ட இலை கொண்ட இது வெற்நிறமானதாகும்.

அவுஸ்திரேலியாவில் 1850ம் ஆண்டில் ஆரம்பித்த 'புளூ மோல்ட்' எனும் இந்த வியாதி 100ஆண்டுகளுக்குப் பின்னுல் ஐரோப்பாவிற்குப் பரவி இப்பொழுது உலகம் பூராவிலும் புகையிலைச் செய்கைக்குப் பயங்கர அழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

'இமுனி—89' என்ற பெயர் கொண்ட புதிய ரக

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU
Post Box 49, Jaffna
Telephone 389
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை
புரட்டாதி மாதம் 15-ந் திகதி
(1-10-68)

# ஆலயப் பிரவேசப் பிரச்னை மனுேநிலையைப் பொறுத்தது

''ஆலயப்பிரவேசப் பிரச்னை முற்றிலும் மனுேநிலையைப் பொறுத்தது. சூழ்நிலைக்கும் காலமாற்றத்துக்கும் ஏற்பமனப்போக்கு மாறுபடுகிறது'' என்று ஆனைக்கோட்டை முத்தனுர் கோயில் முகாமையாளர் திரு. ரி. முத்துக்குமாரு கூறுகிறுர். ஆலயப்பிரவேசத்துக்காக போராடுகிறவர்களுக்கும் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பவர்களுக்கும் அவர் கூறும் கருத்துக்கள் பயனுள்ளவையாய் இருக்கும் என்பதால் அவருடைய கருத்துக்களை இங்கு பிரசுரிக்கின்றேம்.

யாழ்ப்பாணத்திலுள்ள அனேக கோயில்கள் குறிப்பிட்ட சில வகுப்பினருக்கும் சாதியினருக்கும் மட்டும் திறந்துவிடப்பட்டு ஏஞ்சியவர்களுக்கு ஆலயப் பிரவேசம் மறுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கம் பல ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வந்த...

போதிலும் இந்தப் பாகுபாட்டுக்கு எதிராக இப்பொழுது போராட்டமும் வகுப்பு, சாதி அடிப்படையில் பாரபட்சமின்றி அனைவரும் ஆலயத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்படவேண்...

...கேடு ஒன்றுமில்லையென்று மக்களுக்கு விளக்கப்படுத்தி அவர்களை இணங்கச்செய்ய வேண்டும். மற்ற விஷயங்களைப் போல சமய விஷயங்களில் சர்ச்சைக்குரிய சம்பவங்கள் நிகழ இடம் வைக்க...

அரசியல் பாரபட்சம் எதுவுமின்றி நிறைந்த நல்லெண்ணத்தோடும் பக்குவ உள்ளத்தோடும் இந்தப் பிரச்னையை மிகக் கவனமாக கையாளவேண்டும். ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்பவர்கள் இந்தியாவிலும் நம் நாட்டின் இதர பகுதிகளி...

...லும் இந்து ஆலயங்களில் மட்டுமன்றி வழிபாட்டுக்குரிய தேவாலயங்கள், மசூதிகள், விகாரைகள்போன்ற எல்லா இடங்களிலும்நடைமுறையிலுள்ள வழக்கங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றுள்ள ஆலயங்களில் வழக்கத்திலுள்ள நடைமுறைகளையும் பழக்கங்களை...

...யும் பின் விளைவுகள் பற்றியும் பின்வரும் அம்சங்களை கருத்தில் வைத்துக்கொண்டு ஆராய்ந்தறிதல் வேண்டும்.

முன்னர் ஆலயப் பிரவேசம் மறுக்கப்பட்ட ஒருவர் கோவிலில் இருப்பதால்வழிபாடு செய்யும் மற்றவர்களின் மனம் சஞ்சலப்படுகிறதா அல்லது ஆலயத்துக்குள் அமைதியான சூழ்நிலை நிலவுவதைக் கெடுக்கிறதா, ஆலயப்பிரவேசத்திலும் வழிபாட்டுக்கும் இடமாகவில்லாத அளவுக்கு கோவில் அசுத்தப்படுத்தப்பட்டுள்ளதா.

சட்டத்தின் முன்பும் கடவுளின் முன்பும் யாவரும் சமம் என்ற உணர்வோடு இந்தக் கேள்விகளுக்கு பாரபட்சமின்றி விடைகாண வேண்டும். இது மனநிலையை பொறுத்தது. கால மாறுதலுக்கும் சூழ்நிலை மாற்றத்துக்கும் ஏற்றவகையில் மனிதனின் மனப்போக்கு மாறுபடுகிறது.

— ரி. முத்துக்குமாரு —

## போதும் நிறுத்துங்கள்

''ஒற்றுமை என்ற குரல் கேட்டதும் 'வேற்றுமையை அறிவிப்பதற்கான எதிரொலி' கேட்பது நமது தமிழ்த்தலைவர்கள் மத்தியில் தவிர வேறு எங்கும் காணமுடியாத, கேட்க முடியாத அதிசயம்.

வேற்றுமையில் ஒற்றுமை காணமுடியுமென்பதை தனி மனிதர்கள் மட்டுமல்ல பெரிய அரசுகள்கூட உணர்த்தியிருக்கின்றன. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்குக்கூட தமிழ்த் தலைவர்கள் தயாராக இல்லை.

அவர்கள் பார்வையில்

## வடக்குகிழக்கில் கடத்தல்

★ மதறுஸ் தந்த அன்...

# எல்லா உள்ளூராட்சிமன்றங்களும் கோரிக்கைவிடவேண்டும்

## கோணேசர் ஆலயப்பிரச்னை: மானிப்பாய் ப. ச. தீர்மானம்

யாழ்ப்பாணம். திங்கள்

கோணேஸ்வர ஆலயப் பகுதியை புனித நகரமாக்க வேண்டுமென சகல உள்ளூராட்சி மன்றங்களும் தீர்மானிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஒன்று மானிப்பாய் பட்டினசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

...கூட்டத்தில் இத் தீர்மானம் திரு. அப்புத்துரையினுல் பிரேரிக்கப்பட்டு திரு இராசசூரியரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாணயமதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து மானிப்பாய் பகுதி மக்கள் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாது அவதிப்படுகிறபோதுள்ள 9 ... 1969ம் ஆண்டிலிருந்து 6 வீதமாகக்குறைப்பதெனவும் இக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மானிப்பாய் வரியிறுப்பாளர் சங்கம் அனுப்பியிருந்த மகஜர் ஒன்றிற்கிணங்க தீர்மானிக்கப்பட்ட வரிக்குறைப்பு முடிவை உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அனுப்புவதெனவும் இங்கு முடிவு செய்யப்பட்டது. [எ. நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதிய உலகை காண்கிறேம்"

## திருமலையில் யோகிராஜின் அமெரிக்க சிடர்கள்

திருகோணமலை, திங்கள்

''இலங்கையரான உங்களுடன் இன்று கலந்து இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ஐக்கிய அமெரிக்கா தேசம் பற்பல விரர்களை கண்டிருக்கிறது. இன்று வானமண்டலத்தை ஊடுருவ இருள் அமெரிக்கன், இனி மாத்துறையிலும் நடிகர் நடிகையர் முன்னணி வகிக்கின்றனர். இரண்டு ஒருடங்களுக்கு முன்பு இதே அமெரிக்க தேசம் ஒரு மெஞ்ஞான தத்துவ ஞானியையும் கண்டுள்ளது. அவரே சுவாமி சச்சிதானந்த யோகிராஜ். ஒருதட்டத்தில் வைக்கப்பட்டுள்ள மலர்களில் ஓரே மலர் சுவாமி சிவானந்தர் எனக்கண்டிருந்த நாம் இப்போது இருமலராக சுவாமி சச்சிதானந்தாவையும் சேர்த்துக்காண்கிறோம். ''அன்புசெலு'' என்னும் அருமந்திரத்தினுல் அவரிடமிருந்து ஒளி பெருக்கப்பட்டு கவர்ச்சி அடைந்திருக்கிறார். அவர் சிவானந்தரின் மகிமையை இலங்கையர் அறிந்திருக்கின்றனர். தொழில் நுட்பரீதியில் நாம் பெற்றுள்ளவற்றுள் எல்லாம் மேலாக ஐக்கிய அமெரிக்காவின் மனித வர்க்கத்தினிடையே சமத்துவம் கண்டுள்ளோம். இப்போது இவ்வ ஜீவனசங்கத்தில் அங்கத்துவம் வகித்து ஒரு புது உலகையே காண்கிறேன். இதே உணர்வு உங்களிடமும் இருக்கக் காண்கிறேன்'' இவ்வாறு சுவாமி சச்சிதானந்த யோகிராஜின் அமெரிக்க சிடர்களில் ஒருவரான அர்ச்சுனன் என்று பெயர் மாற்றிக்கொண்டுள்ள சிடர் தமது உரையில் குறிப்பிட்டார்.

ஈஸ்வரன் என்னவர் பேசுகையில், 'பதினைந்து ஆண்டுகட்குமுன்பு உங்களில் பலர் சிறுபராயத்தினராக இருக்கையில் சுவாமி சிவானந்தரின் அருளாசிகளைச் சுமந்து கொண்டுவந்தவர் சுவாமி சச்சிதானந்தா. இவ் ஜீவன சங்கத்தினருடன் கூடி இந்தியாவுக்கு நான் சென்றிருக்கிறேன். இன்றுவரை சமய ஆசாரங்களுள் கூடிய யோகப்பயிற்சிகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம்' என்றார்.

பெண்மணிகளில் ஒருவரானவர் பேசுகையில், சுவாமிஜியைக் கண்டேன். நாம் இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கினோம். எங்கள் கருத்துக்களைப் பரிமாறத் துடித்தோம். இயலவில்லை. கண்கள் மட்டும் பேசின. வரய்கள் புன்முறுவல் பூத்தன. பார்வையின் இடையில் இருவர் விழிகளிலும் இரண்டுதுளிக் கண்ணீர் துளித்திருந்ததை உணர்ந்தோம். இதுதான் தெய்வீகம், ஆத்மீக உணர்வின் எடுத்துக்காட்டு எனப் பின்பு உணர்ந்தேன்' என்றார்.

பின்பு சாவித்திரி பேசுகையில் ''இறைவனின் சேர்க்கை அதி அற்புதமானது. நான் என் உறவுள்ள மனித இனத்தையும் என் நாட்டையும் நேசிக்கிறேன். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற உயர்ந்த நோக்குடன் வாழ்கிறேன். என்னுல் இய(ன்)ற அளவு கடுதலான நன்மைகளைச் செய்கிறேன். எனக்குக் கிடைப்பவற்றை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்கிறேன். உலகில் எல்லோரும் சட(ப்) பொருட்களையே நாடுகின்றனர். எங்களோர் இந்தியாவிலும் பணமும் வெள்ளியும் தாண்டுகுறிக்கோளாகின்றன என்றார்.

சிவசாமி சச்சிதானந்தாவும் உரையாற்றினர்.

---

## இ.தி.மு.க. அறிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

''இந்நாட்டின் இன்றைய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றமும், கொந்தளிப்பும் அனைவரினதும் உன்னிப்பான கணிப்பையும், கவனிப்பையும் ஈர்த்துள்ளன. இன்று நடப்பது உண்மையான அரசியல் அல்ல. கபட நாடகமே இதில் தமிழரசுக்கட்சியினர் முக்கியபங்கு வகிப்பதால் பாதிக்கப்படுவது தமிழினமே. இத்தருணத்தில் தமிழினத்தின் மானத்தைக் காக்கவேண்டியது இ.தி.மு.க வின் கடமையாகும்.

இவ்வாறு இலங்கைத்திராவிடர் முன்னேற்றக்கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் திரு. எ. உ. தேவராஜன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

---

## எதிரிகுற்றவாளி தீர்ப்பு 10-ல்

வல்வெட்டித்துறை.

தொண்டமானுறு செல்வச்சந்நிதி கோவிலடியிலுள்ள செல்லையா முனிஐயா என்பவருடைய வடையிற் புத்தூரைச்சேர்ந்த காசிப்பர் சரவணமுத்து என்பவர் ரூபா 2912 பெறுமதியான தங்கநகைகளைக் களவாடியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரியை குற்றவாளியாகக் கண்டு தண்டனையாளம் கொடுக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை அடுத்தமாதம் 10-ந்திகதிக்கு மாஜிஸ்திரேட் ஒத்திவைத்துள்ளார்.

---

## ஒரேதூரம்: கட்டணத்தில் வித்தியாசம்

சுன்னுகம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளைக்கும், குருபசிட்டிக்கும், வசாவிளானுக்கும் பஸ்ஸில் பிரயாணம் செய்ய 35 சதம் கட்டணமாக எடுக்கப்படுகின்றதாம். ஆனுல் யாழ்ப்பாணத்திலிருந்து அதேதூரத்திலிருக்கும் கட்டுவனுக்கு பஸ்கட்டணமாக 45சதம் அறவிடப்படுகின்றதாம். 'தினசரி பிரயாணம் செய்யும், உத்தியோகத்தர்களும், வியாபாரிகளும் இதனுல் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

---

## "ஒழுக்கத்தைப் பேண வேண்டும்"

சுழிபுரம், திங்கள்

''ஒவ்வொருவரும் தமது வாழ்வில் ஒழுங்கை கடைப்பிடிக்கவேண்டும். அப்போது தான் வாழ்வு சிறக்கும். நல்ல நூல்களை கற்பதன் மூலமும் வாழ்ந்துமறைந்த பெரியார்களின் அடிச்சுவடை பின்பற்றுவதன் மூலமும் ஒழுக்கத்தை நமது வாழ்விலும்வகுத்துக் கொள்ளலாம்.''

பண்ணாகம் தெற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினரின் நவராத்திரி விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. க. வாமதேவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு அ. அப்பாத்துரை தலைமைவகித்தார். பண்டிதர்கள் க. மயில்வாகனம், ப. இராசகுரு உட்பட மற்றும் பலரும் பேசினர். திரு. சோ. திருச்செல்வம் நன்றியுரை கூறினர்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ். 1—10—68

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)]

344 மீ அல் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 வசனநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 இந்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 வீணை, 6-45 சாவளம், 7-00 இரசமஞ்சிகை, 7-30 நேயர் விருப்பம், 7-45 நாடகம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 யூனஸ்கோ உரைச்சித்திரம், 9-45 நேயர்விருப்பம், 10-15 குரல்வகை.

---

## அடுத்தாண்டுதான் மின்சாரம்

பருத்தித்துறை. திங்.

இறக்குமதித் தட்டுப்பாடு காரணமாகவும், உதிரிப் பாகங்கள் கிடைக்காமையாலும் இதுவரை மின்சார வசதிகளைப் பெறுதவாம். பகுதிகள் அடுத்தாண்டு நடுப்பகுதியளவிலேயே மின்சாரம் பெற முடியுமென்று மின்சாரப் பகுதி உயர்தர உத்தியோகத்தர் ஒருவர் கூறுகிறார்.

# "இணக்க சபைகளில் கட்சிபேதம் கூடாது"

இமையாணன், திங்கள்

''இணக்கசபைகளே நீதி அளிக்கும் மன்றமாகக் கருதக்கூடாது. நீதிக்கப்பாற்பட்ட இணக்கசபையாக இருக்க வேண்டும். கோபப்பட்டவர்களை சமாதானப்படுத்துவதும் சமாதானத்துக்கு தூண்டுவதுமே இதன் நோக்கமாக இருக்க வேண்டும். கட்சிபேதங்களை கருதாது திர்க்கமான முறையில் பிரச்சினைகளை தீர்த்து சேவைசெய்யவேண்டும்.

இவ்வாறு உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் நடைபெற்ற உடுப்பிட்டி கிராமஇணக்கசபையின் ஆரம்பக் கூட்டத்தின் போது நீதிஅமைச்சின் உயர்தர அதிகாரிகளில் ஒருவரும் இணக்கசபையின் நிர்வாக செயலாளருமான திரு. பி. ஜி. இறிவர்தன கூறினர்.

சபையின் தலைவரும் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் அதிபருமான திரு. எஸ். எஸ். செல்வத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூறியதாவது:—

'உலகில் எந்தப்பகுதிகளிலும் சச்சரவுகளும், சண்டைகளும் உண்டாகின்றன. இதில்கூடியபங்கு கிராமப்புறங்களில்தான் தோன்றுகின்றன. இச்சிறிய சச்சரவுகளில் அநேகமானவை ஈற்றில் கொலைகளாகவும் மாறிவிடுகின்றன. இதனுல் பணம் அதிகமாக விரயமாகிறது. பணத்தைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதும் இல்லை. இதனைக் கோட்டின் மூலம் பரிகாரம் தேடமுடியாது. வழக்குகளுக்கு வழக்கறிஞர்களும் நீண்ட நேரம் ஆலோசிக்கவேண்டியுள்ளது.'

மக்களை ஒற்றுமையாக்குவதுடன் பணம் விரயமாகாமல்செய்வதும்குடியியல் சம்பந்தமான வழக்குகளை குறுகிய காலத்தில் தீர்த்துவைப்பதும் இணக்கசபைகளின் கடமையாகும். விவகாரங்களை உடனுக்குடன் காலதாமதமில்லாமல் தீர்த்துவைக்க முடியாது. அப்படித் தீர்த்தாலும் அவர்களிடையே சமாதானத்திற்கு மாறாக கோபதாபம் கூடிக்கொண்டுவரும் நிலையுமுண்டு. ஆகவே அப்படியான சச்சரவுகளை உடனுக்குடன் தீர்க்க முகதிக்காமல் ஆறவிடவேண்டும்.

அடுத்துகொழும்பில் இருந்துவந்திருந்த நீதி அமைச்சின் மற்றுமொரு உயர்தர அதிகாரியான திரு ஐ. எம். எம். சாமி இணக்கசபையின் கடமைகளையும் சட்டங்களையும் அங்கத்தவர்களின் கடமைகளையும் உரிமைகளையும் பற்றி விளக்கினர்.

# நாகர் கோயிலிலும் திருவிழா இல்லை

## ஆலயபரிபாலன கர்த்தா தகவல்

புலோலி, திங்கள்

நாளை ஆரம்பமாகவிருந்த பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் கோவில் வருடாந்த உற்சவம் இம்முறை நடைபெற மாட்டாதென ஆலயபரிபாலன கர்த்தாக்களில் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்,

கொடித்தம்பத்தில் பழுது ஏற்பட்டிருப்பதால் அதை உடனடியாகத் திருத்தி உற்சவங்களை நடாத்துவதற்கு முடியாமலிருப்பதாக அவர் கூறினர்.

மூலஸ்தானத்தில் உள்ள விக்கிரகத்தை வாலஸ்தானம் செய்து திருவிழாவை இவ்வருடம் நிறுத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

இவ் வருட திருவிழா உபயகாரர் அனைவரதும் சம்மதத்துடன் இம் முறை நிறுத்தப் பட்டுள்ளதாகவும் சொன்னுர்.

---

## சம்பளத்தை கூட்டுக

சுழிபுரம், திங்கள்

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஆயுள்வேத வைத்தியர்களின் சம்பளத்தை அதிகரித்துக் கொடுக்குமாறும் அடுத்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் பணத்தை ஒதுக்கவேண்டிய ஆயத்தங்களைச் செய்யுமாறும் ஆயுள்வேதவைத்தியர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சிமன்றங்களின் தலைவர்களுக்கு ஓர் சுற்றுநிருபத்தை ஆயுள்வேதக் கமிஷனர் அனுப்பியுள்ளார் எனத் தெரிகிறது.


கலா தையல் பயிற்சிசாலை

330, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

பெண்கள் தையற் கலையில் பயிற்சி பெறவும், தராதரப் பத்திரம் பெறவும், பயிற்றப்பட்ட தையல் ஆசிரியையினுல் கற்பிக்கப் படுகின்றது. 3 வகையான நேரங்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மாதக் கட்டணம் ரூ. 7-50 சதம் மட்டுமே!

விபரங்களுக்கு எழுதுங்கள்



சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

ஈழநாட்டில் எங்குமே கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண மக்களின் தரிசனத்துக்கு வந்துள்ள இந்தோனேஷியா மாலித்தீவு காளி விநாயகர் விக்கிரகம் இன்று பிற்பகல் 2 மணியிலிருந்து இரவு 9-30 மணிவரை வல்வெட்டித்துறை இந்துக்கல்லூரியிலும் நாளை நல்லூர் சிவன்கோவில் திருஞானசம்பந்தர் ஆதீனமடத்திலும் இம்மாதம் 19, 20-ம் திகதிகளில் வல்வெட்டித்துறையிலும் 21-ந்திகதி கொடிகாமத்திலும் மக்கள் தரிசனத்துக்கு வைக்கப்படும்.

சட்டவிரோத குடியேற்றம் கள்ளக்கடத்தல் ஆராய

# பொலிஸ்அதிபர்-இராணுவதளபதி யாழ்ப்பாணம் வந்தனர்

## நிரந்தரக் காரியதரிசியும் இன்று வரலாம்

யாழ்ப்பாணம், செவ்வாய் இரண்டுநாள் உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலிக் அபயகுணவர்த்தன நேற்று காலைவிமானத்தில் பலாலியை வந்தடைந்தார்.

திரு. அலிக் அபயகுணவர்த்தனவுடன், இராணுவத் தளபதி திரு. சேபால அட்டிகல, உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிட்னி பெர்னாண்டோ ஆகியோரும் நேற்று காலை 9-20 மணிக்கு விமானத்தில் பலாலியை வந்தடைந்தார்கள்.

வடபகுதியில் கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக இங்கு வந்துள்ள இவர்களை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். கி. தவராஜா, சட்டவிரோதக் குடியேற்ற தடுப்பு சுப்ரீண்டன் திரு. விஜயவிசேனநாயக, வடபகுதி இராணுவ அதிகாரி திரு. கொரிஸ்ஜெயவீர ஆகியோர் வரவேற்றனர்.

நேற்று காலை காரைநகருக்கு விஜயம் செய்த பொலிஸ், இராணுவ அதிகாரிகள், நேற்று மாலை காங்கேசன்துறையில் உயர்தர மகாநாடொன்றை நடத்தினார்கள். சட்டவிரோதக்குடியேற்றம், கள்ளக் கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதுபற்றி இங்கு ஆராயப்பட்டது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியான திரு. ஜீ. வி. பி. சமரசிங்காவும் இன்றுஇங்கு வருவார் என பொலிஸ் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இன்றுகாலை 9-15 மணிக்கு கிளிநொச்சியில் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் அலுவலகத்தை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திறந்துவைப்பார். இதன் பின்னர் ஆனையிறவு, தடைமுகாம், பூநகரி சங்குப்பிட்டி ஆகிய இடங்களுக்கும் பொலிஸ் ராணுவ அதிகாரிகள் விஜயம் செய்வார்கள். —— [வா. நி.]

## பத்மினி கொலை வழக்கு அப்பீல் விசாரணை

கொழும்பு, திங்கள் திருமதி பதமினி குலரத்னவை கொலைசெய்ததற்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட டாக்டர் குலரத்ன, அவரது காதலியான திருமதி லோனு, பணிப்பெண் சோபியா ஆகியோரது அப்பீல் இன்று 3 நீதியரசர்களான திருவாளர்கள சிறிஸ்கந்தா, அலஸ், சமரவிக்கிரமா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது டாக்டர் குலரத்ன சார்பில் ஆஜரான திரு. ஜி. சிட்டி இவர்தான்கொலை செய்தார் என்பதை சாட்சியங்கள் நிரூபிக்கவில்லையென்றும் தீர்ப்பின்போது ஜூரிசபையினர் தவறான வழியில் திருப்பப்பட்டார்கள் என்றும் தமது வாதத்தின்போது எடுத்துக்கூறினார்.

காலியைச் சேர்ந்த டாக்டர் குலரத்ன அவரது காதலியான திருமதி லோனு குலரத்ன பணிப் பெண்ணான சோபியா ஆகியோர் டாக்டர் குலரத்னவின் மனைவியான திருமதி பத்மினி குலரத்னவை நஞ்சூட்டிக் கொலைசெய்ததாக தொடரப்பட்டிருந்த வழக்கில் நீதியரசர் திரு. எச். என். ஜி பெர்னாண்டோ இவர்கள் மூவருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தார் என்பது தெரிந்ததே.

## அமைச்சருக்கு புகார்

[காங்கேசன்துறை திங்கள் புகையிரத இலாகா ஊழியர்களை பொலிஸ் அதிகாரி ஒருவர் தாக்கினாராம். காங்கேசன்துறைப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி போக்குவரத்து மந்திரிக்கு புகையிரத இலாகா ஊழியர்கள் புகார் செய்துள்ளனர்.

கடந்த இரவு காங்கேசன்துறை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் புகையிரத இலாகா ஊழியர்களை அநாவசியமாகத் தாக்கியதாகவும் இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் வேலைநிறுத்தத்தில் இறங்கக்கூடுமெனவும் புகையிரத இலாகா ஊழியர்கள் தந்தி மூலம் போக்குவரத்து அமைச்சருக்கு அறிவித்துள்ளனராம்.

## மரண அறிவித்தல்

முன்னைநாள் இந்துக்கல்லூரி ஆசிரியரும் மண்டைதீவு மகாவித்தியாலய ஆசிரியருமாகிய திருமதி கமலம் அவர்களின் கணவரும் கவிதா, சோமசுந்தரம் அவர்களின் பிதாவும் திருமதி அமிர்தலிங்கத்தின் சகோதரருமான முருகேசு சதாசிவம் அவர்கள் 30-ந் திகதி திங்கட்கிழமை தேகவியோகமானார். அன்னாரின் சமக்கிரியைகள் 1-10 68 இன்று பிற்பகல் 4 மணியளவில் மண்டைதீவு மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்க. 241

## எதிரிக்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி) அல்லது மாலைன் என்பவர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. எல். டி. சில்வா இயூ. ஸி., அட்வகேட் ரீட்டைன, அட்வகேட் கே. சிவானந்தன், அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆகியோரின் உதவியுடனும், புரக்டர்கள் ஆர். ஜே. செல்வரத்தினம், கே. குணரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிர்க்கரை அரசாங்கத்தாக வழக்கறிஞர் எம். சிவராஜசிங்கம் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எஸ். சிவராஜா ஆஜரானார்.

நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் இவ்வழக்கு பதினொரு தினங்கள் விசாரணைசெய்யப்பட்டது.

## இன்று

யாழ் கலாஷேத்திரனர் வண்ணை கோவில் பின்னையார் கோவில் வீதியில் இன்று நவராத்திரி முத்தமிழ் விழாவையும், 8-வது ஆண்டு நிறைவுவிழாவையும் கொண்டாடுகின்றனர். பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா கலந்துகொள்கிறார்.

## ஐ. அ. குடி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி) க்குமிடையே வைச்சாத்தியுள்ளதாகவும் அமெரிக்க சஞ்சிகையான 'டைம்' தெரிவித்துள்ளது. இந்த உடன்படிக்கையின்படி 500 ரஷ்ய டாங்கிகளும் போர் விமானங்களும் ஏற்கனவே ஐக்கிய அரபுக் குடியரசுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகவும் இச்சஞ்சிகை கூறியுள்ளது.

ஜாதிக சம்பத இடைக்கால பரிசு

"கம்பர்", சைக்கிள்

கீழ்க்காட்டிய இலக்கச்சீட்டை உடையவர் எம்மிடம் இச்சீட்டைச் சமர்ப்பித்து "கம்பர்" சைக்கிளைப்பெற்றுக்கொள்ளவும்.

22 E 000444

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஒக்டோபர் மாதம் 1-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தீபாவளி மலிவு விற்பனை

ஐப்பசி 1 முதல் 20 வரை

விற்றுமுடிப்பதற்காக நூல் வேலைப்பாடு கொண்ட "டிப்ளோமற்" சேலை ம. வி. 25/-

புதிதாக வரவழைக்கப்பட்ட யூனியர் குறுநாட்டு சேலைகள் ம. வி. 45-50

அழகிய கைத்தறிச் சேலைகள் விற்று முடிப்பதற்காக ம. வி. 24/- மேல்

புதிதாக வரவழைக்கப்பட்ட கிளோஸ்கொட்டன் 45" ம. வி. 7-75 யார்

சிறுமிகளுக்கு ஏற்ற அழகிய வேலைப்பாடு கொண்ட றெடிமேட் கவுன்கள்

புதிதாக வரவழைக்கப்பட்டுள்ள வீட்டுப்பாவனைக்கேற்ற "பிளாஸ்ரிக்" பொருட்கள்

விற்று முடிப்பதற்காக "கனிமூன்" பிறசியர் ம. வி. 1-50

அநேக பல வர்ண டிசைன்களில் பங்கோர்நைலெக்ஸ் சேலைகள் ம. வி. 42-50 மேல்

"டிப்ளோமற்" லக்ஸறி சேட் ம. வி. 29-50 ம. வி. 26-50

அலுவலக பாவனைக்கு ஏற்ற "றெக்ஸ் சோ" சேட்டுகள் ம. வி. 7-50

சிறுவர்களுக்கு ஏற்ற அழகிய சூட்டுகள்

டயமன்ஸ்

வடமாகாண பிரபல புடவை வியாபாரிகள்

[illegible] 66 [illegible] வீதி, (தொலைபேசி: 316)

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org